**கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டம் (எஸ்சீயூஆர்பீ) - 2023**

---

கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் (எஸ்சீயூஆர்பீ) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் (ஏஐஐபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய எல் 0081 ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 3.4.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சானது நிறைவேற்றல் முகவராக காணப்படுகின்றதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் முறைமை முன்னேற்றங்களுடன் வருமானம் குறைந்த சமூகங்களின் வீடமைப்பு நிலைமைகளை உயர்த்துதல், இயலுமான வகையில் வீடமைப்பு மற்றும் காணியினை மீள் அபிவிருத்தி செய்தல் போன்றவற்றில் முதலீடுவதனூடாக கொழும்பில் காணிப் பயன்பாட்டின் வினைத்திறனை உயர்த்துதல் போன்ற செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். வீடமைப்பு நிர்மாணம், காணி அபிவிருத்தி, தொழில்நுட்ப உதவி மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் என்ற 03 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 50,460 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 287 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 35,163.7 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொ 200 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் (ஏஐஐபீ) நிதியளிக்க இணங்கப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 14,417.2 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்திலிருந்து நிதியீட்டம் செய்வதற்கு இணங்கிருந்தது. மேலும் ஐ.அ.டொலர் 5 மில்லியனுக்குச் சமமான ரூபா 879.1 மில்லியன் தனியார் பங்காளரால் நிதியளிக்கப்பட்ட இணங்கப்பட்டது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 யூலை 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட்ட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், 2022 யூலை 01 ஆந் திகதி திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் (ஏஐஐபீ) அவசர சுகாதார கூறிற்கு ஐ.அ.டொ 70 மில்லியன் நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டதன் காரணமாக ஆரம்ப செயற்பாடுகளின் விடயப் பரப்பு மாற்றப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 02 ஆம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

- இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 511.81 மில்லியன் தொகைக்காக திறைசேரி பிணைமுறிகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 511.81 | விநியோகிக்கப்பட்ட ரூபா 511.81 மில்லியன் திறைசேரி பிணை முறிகள் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களுக்கு உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக செயல்முன்னேற்றம்

| கூறு | செற்பாடுகள் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற் கான காரணங்கள் | முகாமைத்துவத் தின் கருத்துரை | கணக்காய்வாள ரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | | | |
| (அ) | கொழம்பகே மாவத்தை வீட்டு அலகு | 87 | 80 | 2020 யூன் 01 ஆம் திகதி ரூபா 3,595.56 மல்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடைய 624 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக பொறியியல் கம்பனிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2023 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்திட்டத்திற்காக ரூபா 3,609 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 3,595.55 | நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமைகாரணமாகும். | பொருளாதார நெருக்கடிகள் ஒப்பந்தகாரரின் காசுப்பாய்ச்சலுக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | கால அட்டவணையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மில்லியன் ஆகும். எனினும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கான 87 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 80.27 சதவீத செயல் முன்னேற்றம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | ஒபேசேகரபுர வீட்டு அலகு | 2022 மார்ச் 29 இல் இடைநிறுத்தப் பட்டுள்ளது | | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,723.35 மில்லியன் ஆன 300 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக நிர்மாணக் கம்பனிக்கு ரூபா மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் 2020 மே 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்கக்ப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றலின் காரணமாக இந்த செயற்திட்டம் 2022 மார்ச் 29 ஆந் திகதி நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் ரூபா 296 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரை செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை முடிவுறுத்தியமை காரணமாகும். | DAB தீர்மானம் புதிய ஒப்பந்ததாரருக்கு கையளித்தல் தாக்கமளிப்பதாக கருதி அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. | செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அபல்வத்தை வீட்டு அலகு | 100 | 30 | இந்த வீடமைப்பு திட்டம் ஊடாக 700 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டிருந்தது. ரூபா 4,473 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் சைனா புகையிரத கூட்டு தொகுதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஒக்டோபர் 27 ஆந் திகதி ஆர்பிக்கப்பட்டதுடன் | கொவிட் தொற்று நோய் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடி தாக்கமளித்த காரணங்கள் ஆகும். | தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் நலிவான செயலாற்றல் செயற்திட்ட செயல் முன்னேற்றத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | கால அட்டவணையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முழுமையாக பூரணப்படுத்த வேண்டிய நிர்மாண நடவடிக்கைகள் 35 சதவீதத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது 29.33 சதவீத செயல் முன்னேற்றம் பெறப்பட்டிருந்தது. மேலும் குறித்துரைத்த காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படா திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஈ) | பேகுசன் வீதி வீட்டு அலகு | 16 | 12 | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,511 மில்லியன் ஆன 750 வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் சைனா சிவில் இன்ஜினியரிங் கூட்டுத்தாபனம் மற்றும் சைனா ரெயில்வேயிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2021 சனவரி 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2024 சனவரி 04 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 16 சதவீத இலக்கிடப்பட்ட செயல் முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போதும் 12 சதவீதமாக இருந்தது. அடிப்படை வேலைகளின் தாமதம், திட்டமிடல் மற்றும் தொழில்நுட்பங்களைச் | திட்டமிடல் மற்றும் தொழில் நுட்ப விடயங்களை சமர்ப்பித்தல் மற்றும் மீளாய்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டமை. | ஒப்பந்தகாரரின் செயலாற்றல் கொவிட் தொற்று நோய் நிலைமை தாக்கமளித்த காரணங்கள் ஆகும். | கால அட்டவணையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சமர்ப்பித்தல் மற்றும் மீளாய்வுகளில் கவனத்திற்கொள்ளக் கூடிய தாமதம் மற்றும் பிரதானமாக அந்த நிலைமைக்கு தாக்கமளித்திருந்தது.

### 3.2 நிதியத்தின் பயன்பாடு

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் செயற்திறன் இன்றி நிதி பயன்படுத்தியதன் காரணமாக கடன் தொகை ஐ.அ. டொலர் 70 மில்லியனைக் குறைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதன் விளைவாக 03 ஆவது கட்டத்தின் செயற்திட்ட செயற்பாடுகள் கைவிடப்பட்டதுடன் வீட்டு நலனாளிகளின் எண்ணிக்கை 1,272 இனால் குறைவடைந்திருந்தது. | நிதியத்தை மீண்டும் ஒதுக்கியதன் விளைவாக செயற்திட்டத்தின் 03 ஆவது கட்டம் அமுல்படுத்தப்பட வில்லை. | குறித்துரைத்த கால எல்லையில் கடன் பணம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப கிரய மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் பங்களிப்பு ஐ.அ. டொலர் 42 மில்லியன் ஆகும். எனினும் அது ஐ.அ. டொலர் 28 மில்லியன் வரை ஐ.அ. டொலர் 14 மில்லியனால் குறைக்கப்பட்டிருந்தது. மேலும் திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் காணி மீள் அபிவிருத்திக்காக தனியார் கூட்டுமுயற்சி பங்களிப்பு முழுமையாக நீக்கப்பட்டிருந்தது. | சுகாதார அமைச்சிற்கு ஐ.அ டொலர் 70 மில்லியன் ஒதுக்கியமையினால் இந்த செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக ஐ.அ. டொலர் 130 மில்லியன் பெற முடியுமாக இருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரை செயற்திட்டத்தால் ரூபா 479 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் மற்றும் ரூபா 1,141.97 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்த போதும் செயற் திட்டத்தின் நலிவான செயலாற்றலின் காரணமாக செயற்திட்டத்தால் ஐ.அ. டொலர் 130 மில்லியன் ஆன கடன் தொகையில் ஐ.அ. டொலர் 58.75 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சகல உப செயற்திட்டங்களிலும் வேலைகள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்தக் காலப்பகுதியின் போது Covid 19 தொற்று நோய் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்திற்கு அதிக அளவில் தாக்கமளித்த மையினால் எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை பெறமுடியாதிருந்தது. | கடன் தொகையை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| வீடமைப்பு நிர்மாணத்தில் 04 செயற்திட்டங்கள் ஒப்பந்தகாரரால் பட்டியல் செலுத்துதல் தாமதமடைந்தமைக்காக ரூபா 153 மில்லியன் வட்டி செலுத்த கோரப்பட்டிருந்தது. செயற் திட்டத்தின் நலிவான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக அந்த தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டதுடன் அது கிரயத்தை விஞ்சிச் செல்வதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | நாடு முகங்கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொதுத் திறைசேரியால் இலங்கை அரசாங்கத்தின் பங்குகள் குறித்துரைத்த நேரத்தில் விநியோகிக்க முடியாதிருந்ததுடன் ஒப்பந்ததாரர்களிடமிருந்து செலுத்துதல் தாமதமடையச் செய்வதற்குப் பதிலாக செயற்திட்டத்திற்கு மாற்று வழி காணப்படவில்லை. | நிலுவைப் பட்டியல்களை தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத / குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 - மாடிகளையுடைய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக அத்திவாரப் பகுதி மற்றும் தூண் அமைப்பதற்குரிய பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் ஒபேசேகரபுர செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட கம்பிகள் மற்றும் கொங்குகீற் பகுதியில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. அதன் விளைவாக 2022 மார்ச் 29 வரை செலவிடப்பட்ட ரூபா 296 மில்லியன் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | ஒபேசேகரபுர செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட விடயங்களைப் பயன்படுத்தப்படுவதுடன் அதனை மீண்டும் கேள்வி கோரும் செயற்பாடுகளின் போது கவனத்திற் கொள்ளப்படும். | மேலதிக கிரயத்தை குறைப்பதற்காக சரியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வீடமைப்பு திட்டங்களில் மலக்கழிவுகள் அகற்றும் கொழும்பு நகர மலப் போக்குவரத்து முறைமை தொடர்புபடுத்தல் அத்தியவசியமாகும். எனினும் காணப்படுகின்ற மலமகற்றல் முறைமையில் காணப்படுகின்ற பிரச்சினையின் காரணமாக செயற்திட்டத்தின் கழிவுப் பொருட்கள் | வேலைத் தளத்தின் நில மட்டத்தை கவனத்திற் கொண்டு அந்த இடத்தில் கழிவுப்பொருள் பம்பிக் கூடமொன்றை நிர்மாணித்து கொழும்பு மாநகர நகர சபையினால் (CMC) முன்மொழியப்பட்டிருந்தது. | செயற்திட்ட கால எல்லையில் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த முறையில் தொடர்புபடுத்துதல் கொழும்பு மாநகர சபையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. மேலும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் 2024 சனவரி 12 ஆந் திகதி தனியான நிர்மாணமொன்றாக புதிய மலமகற்றல் முறைமைக்காக ரூபா 2 பில்லியன் கிரய மதிப்பீடு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட வேலைகளுக்காக அதிக கிரயத்தை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் திட்டமிடப்படல் வேண்டும். எனினும் 96 சதவீத செயலாற்றல் பெறப்பட்டுள்ள ஸ்ரேடியம்கம வீடமைப்புத் திட்டத்தின் நலனாளிகளுக்கு வீடுகளை வழங்குதல் 2026 யூன் 26 ஆந் திகதி வரை தாமதமடைந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மலமகற்றல் திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக வெளி ஆலோசனையாளரினால் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வெளி ஆலோசனையாளரினால் மலமகற்றல் பம்பிக் கூடத்திற்கு பதிலாக நிலத்தில் மலம் அகற்றல் குழாய்வழி ஊடாக முன்மொழியப்பட்டிருந்தது. | |

## 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட ஆரம்பத்தின் போது செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்காக (PMU) ரூபா 88 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய செயற்திட்ட மேற்பார்வை மென்பொருளை ஸ்தாபித்தல் மற்றும் நாளது வரையாக்குவதற்கான செயற்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை களஞ்சியப்படுத்தும் முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு நாளதுவரையாக்க வேண்டியிருந்த போதிலும் 2024 யூன் 10 வரை மென்பொருள் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | தரவு களஞ்சியத்தை தயாரிப்பதற்காக பெறுகைகள் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மென்பொருளை ஸ்தாபிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆந் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன் 2.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆக்கபூர்வமான செயற்திட்ட முகாமைத்துவத்தை உறுதிப்படுத்து வதற்காக செயற்திட்டப் பணிப்பாளர் ஒவ்வொரு தடவையும் முழுநேர அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் | முழுநேர செயற்திட்ட பணிப்பாளர் காணப்படாமையினால் நிரந்தர செயற்திட்டப் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும் பதிற்கடமை அடிப்படையில் செயற்திட்டப் பணிப்பாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை | ஆக்கபூர்வமான செயற்திட்ட முகாமைத்துவத்தை உறுதிப்படுத்து வதற்காக செயற்திட்டப் பணிப்பாளர் ஒருவர் சகல நேரங்களிலும் முழுநேர அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்றிட்டத்தின் முழுநேர செயற்திட்டப் பணிப்பாளர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட கால எல்லையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளாமைக்கு பிரதானமாக அந்த நிலைமை தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டுள்ளது. | சேர்க்கப்படல் வேண்டும். |
| (இ) | செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் கைநூலின் பிரகாரம் 11 காணி அபிவிருத்தி செயற்திட்டங் களின் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 111.5 ஏக்கர் நில அளவு அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 2022 யூன் 13 ஆந் திகதிய செயற்திட்டத்தை மாற்றும் ஆவணங்களின் பிரகாரம் இந்த கூறு நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்தக் காணியைப் பாதுகாப்பதற்கும், அந்தக் காணியில் உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வில் வெளிப்படுத்த முடியாதிருந்தது. அதனால் செயற்திட்டத்தின் நோக்கத்தின் பிரகாரம் செலவிட முடியுமான தொகையில் வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் காணிகளை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக முதலீடுகளை இடுவதன் மூலம் காணி பயன்பாட்டினை செயற்திறனாக கட்டியெழுப்புவதற்கு திட்டமிடப்பட்டு அமுல்படுத்துதல் செயற்திட்டம் தோல்விய டைந்திருந்தது. | வேலை விடயங்களை மீள் கட்டமைத்தல் மற்றும் காணி அளவினைக் குறைத்தலின் காரணமாக இரண்டு கூறுகளின் கீழ் காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் குறைக்கப்பட்டிருந்தது. தற்போது இந்தக் 02 கூறுகள் காணியை அபிவிருத்தி செய்வதற்காக ஆலோசனைக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த 02 கூறுகளின் கீழ் இனங்காணப்பட்ட காணிகளில் குடியிருக்கின்ற குடும்பங்களை மீண்டும் குடியமர்த்திய பின்னர் விடுவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணிகளின் வேலிகளை கட்டி பாதுகாக்கும் இயலுமை PMU ஈடுபட்டிருந்தனர். மேலும் கூறு 1 இன் விடயப்பரப்பு குறைத்ததன் காரணமாக மீள் அபிவிருத்திக்காக உத்தேசிக்கப்பட்ட காணி 50 ஏக்கவரை குறை வடைந்திருந்தது. | செயற்திட்டத்தை அமுல்படுத்தம் கைநூலின் பிரகாரம் காணி அபிவிருத்திக்காக திட்டம் தயாரித்து அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |